செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- பரிதாபி ஞு வைகாசிமீ உ௨ உ வெள்ளிக்கிழமை (9-6-1972) [இல: க

புதிய அரசியற் றிட்டமும்

# தமிழ்மொழி உரிமைகளும்

[வட்டுக்கோட்டை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்]

புதிய அரசியல் திட்டத்திற்கு எதிரான தமிழ் மக்களுடைய உணர்ச்சி சென்ற 22 ம் தேதியும் அதன் பின்பும் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் நடந்த சம்பவங்களினல் உலகிற்குத் தெளிவாக உணர்த்தப்பட்டது. தமிழ்மக்களை மீண்டும் உறக்கத்திலாழ்த்திவிடும் நோக்கத்தோடு சென்ற சில நாட்களாக பத்திரிகைகளில் பலஅறிக்கைகளும் தலையங்கங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இக்கூற்றுக்களில் எவ்வள்வு தூரம் உண்மையுண்டென்பதை மக்களுக்கு விளக்குவது அவசியமாகின்றது,

(1) புதிய அரசியல் சட்டத்தின்கீழ் 1966 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி உபயோகம்பற்றிய சட்டவிதிகள் அரசியல் திட்ட அந்தஸ்து பெற்றிருக்கின்றன என்றும் அவை பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்றும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு, சி எக்ஸ், மாட்டின் கூறியிருக்கிறர், அரசியல் திட்ட அமைச்சர் முதல் சமர்ப்பித்த சட்டஆக்கத்தில் இச்சட்ட விதிகள்பற்றி எதுவும் கூறப்படவில்லை. அரசியல் நிர்ணய சபையின் உபகுழு மொழிபற்றிய பகுதியை ஆராய்ந்த நேரத்தில் 8 வது பிரிவின் கீழ் இச் சட்ட விதிகளும் அரசியல் திட்ட அந்தஸ்தைப் பெற்றுவிடுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது இச்சந்தேகத்தை நீக்கும்பொருட்டே 8-வது பிரிவிற்கு 2வது உபபிரிவு புகுத்தப்பட்டு இச் சட்டவிதிகள் அரசியல் சட்ட அந்தஸ்துப்பெற மாட்டா என்பது தெளிவாககப் பட்டது. அவை சாதாரணசட்டமாகவாவது நடை முறையிலிருக்குமா எனபதை ஆராயும்போது இச் சட்டவிதிகள்பற்றி அரசியல் நிர்ணய சபையில் அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் கூற்று நிலைமையைத் தெளிவாக்குகின்றது. அரசாங்கத்தின் கருத்து இச்சட்ட விதிகள் தமிழ மொழி உபயோகச் சட்டத்தின் அதிகார எல்லையை மீறியவை என்றும், எனவே அவை செல்லுபடியாகாதசட்டவிதிகள் என்றும் அமைச்சர் கூறியிருக்கின்றார். எனவே தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகள இவ்வரசியல் திட்டத்தினுல் எவ்வகையிலும் பாதுகாக்கப்படவில்லையென்பதும்,

வளர்ச்சி 4-ம் பக்கம்

## திறனாய்வுக்கழகம்

17-6-72 சனிக்கிழமை பி, ப. 1 மணி தொடக்கம் 4-30 மணி வரை அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பணம் வீரசிங்க மண்டபத்தில் ஒரு மகாநாடு கூடும். இம்மகாநாட்டில் இக்கால இளைஞர்கள் நிலை என்ற விஷயம் ஆராயப்படும். அகில இலங்கை முழுவதிலுமுள்ள பல முக்கிய பிரமுகர்கள் சமுகமளிப்பார்கள்.

சிவயோகச் செம்மல்

## ஸ்ரீ யோக சுவாமிகள்

[ஸ்ரீ யோகர்சுவாமிகளின் நூற்றண்டுப் பிறந்ததின ஞாபக விழா 2-6-72 அன்று யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச ராசேஸ்வரி பேய்ச்சியம்பாள் கோயிலில் நிகழ்ந்தபோது சைவப்புலவர் திரு. சு. தம்பாபிள்ளை ஆசிரியர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.]

திருவருளைத் தெப்பமாகக் கொண்டு அருளாட்சி புரிந்து அஞ்ஞானியரை மெஞ்ஞானியராக்கி எச் சமயத்தவரும் ஏற்றிப் போற்ற இலங்கையின் எப் பாகத்தும் எழில்நடம் புரிந்து மன்பதைகளை நல்வழிப் படுத்திய மேலோன் நம் யோக சுவாமி அவர்கள்.

உலகின் பல்வேறு நாட்டவரும் வந்தபோதெல்லாம் தரிசனைசெய்து பேறுபெற்றுச் சென்ற பெருநிதி அது. புத்தர்களின் புனித இசை, (புத்தம் சரணங்கச்சாமி தர்மம் சரணங்கச்சாமி சங்கம் சரணங்கச்சாமி) கிறீஸ்துவின் மலைப்பிரசங்கம், அல்லாவின் அருள்வாக்கு. வேதாகம சுலோகங்கள், சைவ சித்தாந்த மஹாசாகரம், திருமுறைப் பண்ணிசை அத்தனையையும அவ்வப்போது அணைத்துச் சென்றது அது. நம்மையெல்லாம் நல்வழிப்படுத்தத் தினம் இருவேளை சிவபுராணத்தை (சிவனது பழைய வரலாறு) ஓதி, ஓதுவித்து உய்கதிபெற வகை செய்தது அது

பொருந்திய வண்ணம் பூமியில் வாழ்வாயாக. அதுவேநீயாக (தத்துவமசி) அமர்வாயாக, அருமையான உலகத்திலே அதனைக் காணத் துடிதுடித்து அழுது புலம்பி அதனேடு ஐக்கியப் படுவாயாக. உனக்கு எங்கும் எவையும எரியுறு நீர்போலுள்ள ஏக வஸ்துவாம் பிரமம் அன்றி உறுதுணைவேறில்லை. அதனை அடைவாயேல் எல்லாஞ் சித்தியாகும். இதோ பார் உனக்கு என்னைவிட உரைகல் வேறு வேண்டுமா; மூவாசைகள் வயப்பட்டு அவைகளைததேடி ஓடுகின்றனையே அவை நிலையான பொருள்களா? பணம், பாசம், புகழ், இன்பம் இவை மாயையின் தோற்றங்களன்றோ? இவை உன்னை எவ்வளவு காலத்துக்கு அடிவருட வலலன ?

திருவருள் கைகூடுதே சிந்தை களிகூருது
ஒருவரு மெதிரில்லாத உண்மை மூதிருது.

என்ற நற்சிந்தனையைப் பாடிக்கொண்டு சுமமா இருங்கள் இங்ஙன மெல்லாம் அடியேமை ஆண்டருளிய நிலையைக் கண் முன் நிறுத்த மாட்டோம். நற்சிந்தனை (பாடற்றெருகுதி) என்ற பொற் சுரங்கத்தை அள்ளி அள்ளிப் பருகமாட்டோம். விழலுக் கிறைத்த நீர்போல் வியர்த்தமாகின்றோம். என்னே! என்னே?

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
திருச்சிற்றம்பலம்

வாழ்த்த வாயும் நினைக்க
மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந்
தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித்
துதியாதே
வீழ்த்த வாவினை
யேனெடுங் காலமே

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசுசுவாமிகள்

## சிவலிங்கப் பிரதிட்டை

நுணுவில் சிவபூதவராயர் கோயிலில் புதிதாகப் பெறப் பெற்ற சிவலிங்கம் ஒன்று 18-6-72 ஞாயிற்றுக்கிழமை புண்ணிய ஆனி உத்தரத்தினத்தன்று பிரதிட்டை செய்யப் பெறும். இச் சிவலிங்கம் வண்ணார்பண்ணையி லிருந்து அடியார்கள்புடைசூழ நல்லூர், செம்மணி வீதி வழியாக பஜனையுடன் குறித்த இடத்துக்கு எடுத்துச் செல்லப்பெறும்.

## ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசை

திருக்கேதீஸ்வரத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வெகு சிறப்பாக நடத்தப்பெற்றது 30-5-71 காலை திருக்கேதீஸ்வராலயத்தில் சுவாமிக்கும் அம்பாளுக்கும், ஸ்ரீ சம்பந்தசுவாமிகளுக்கும் விசேட அபிஷேகம், விசேடபூசைகள் நடைபெற்றது, பி. ப. 1 மணியளவில் ஸ்ரீ நாவலர் மடத்தில் மாகேசுரபூசை நடைபெற்றது: பன்னூற்றுக் கணக்கான பகதர்கள் இவ்வைபவங்களில் கலந்துகொண்டார்கள்.

## புதுவருட உத்தியோகத்தர்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க இருபத்து நானகாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில தெரிவு செய்யப்பட்ட உத்தியொகத்தர்கள் விபரம் பின்வருமாறு, தலைவர் திரு. டி. எஸ். வணசிங்கா கிழககிலங்கை, உபதலைவர்கள் திரு, நா. கணபதிபிள்ளை திருமலை, திரு. செ. சூசையப்புலம்பேட், வட இலங்கை மன்னூர்க்கிளை. திரு. தா. பி. சுப்பிரமணியம், திருமலை பொதுக் காரியதரிசி, திரு. வ, நடராசா கொழும்பு. திரு. அ பஞ்சாட்சரம், வட இலங்கை வலி கிழக்கு.

# தாயும் பிள்ளையும்

## பிரசவ காலம்

[டாக்டர் திரு. ச. இராசரத்தினம் அவர்கள்]

ஒரு பெண் பிரசவகாலத்தை நோக்கி ஏங்கிப் பயந்திருக்க ஞாயமே இல்லை. இருந்தும் நாம் காண்பது துக்கமே உருவாய கர்ப்பவதியையே. இந்நிலை மாறுதல் வேண்டும. அது ஏற்பட பரந்த அறிவே தேவை. தன்னில் ஏற்பட்ட மாறுதல் யாது? இனி நடக்கப் போவது என்ன? அதன் முடிவென்ன? என்ற இன்னேரன்ன கேள்விகளுக்கு தக்க பதில்களை ஐயம்தெளிய தெளிவாய் அறிவாளாயின் பயத்துக்குப் பதிலாய் மனச் சாந்தமும், சந்தோஷமும் குடிகொண்டவளாய் ஒரு புதுத் தென்புடன் நடமாடுவாள்.

இயற்கையின் நோக்கம் இனத்தைப் பெருக்குவது. இனத்தை அழிப்பதல்ல தேக அமைப்பு, சிசு உற்பத்தி அதன் காரணமாய்த் தாயில் ஏற்படும் மாறுதல்கள், பிறப்பு — இவையெல்லாம் எப்படி அமைகின்றன என்பதை இளம் மகளிர் செவ்வனே அறிந்திருத்தல் வேண்டும். அவர்கள் இந்த அறிவைப்பெற பெற்றோர் பெரியோர் வழிவகுத்தல் வேண்டும். ஒரு பெண்ணின்

( வளர்ச்சி 2-ம் பக்கம் )

## மகோற்சவம்

ஊர்காவற்றுறை கரம்பொன் 'கணபதீச்சம்' சிவன் கோயில் மகோற்சவம் 10-6-72 சனிக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பிக்கப்பெற்று 18 6-72 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் நடைபெறும், 19-6-72 திங்கட்கிழமை ஆனி உத்தரத் தீர்த்த விழாவும மகாயாக கும்பாபிஷேகமும் கொடியிறக்கமும் நிகழும்,

## பாராட்டுகின்றோம்

நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் யாத்திரீகர்கள் அனனதானச் சபையினது பன்னிரண்டாவது ஆண்டு வரவு செலவுக் கணக்கு விபரமும் இவ் வருடம் 1-6-72 தொடக்கம் 22-6-72 வரை ஷை சபை நடத்தும். அன்னதான அறிவித்தல் பததிரிகையும் வரபெற்றோம், ஷை சபை செய்து வரும் அரிய பணி பாராட்டுக்குரியதாகும்;

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபிஞு வைகாசிமீ உஎஉ வெள்ளிக்கிழமை [1972]

## தேவாரப் பண்ணிசை வகுப்பு

தமிழ்நாட்டில் சைவாலயங்களில் தேவார திருவாசகங்களைப் பண்முறையாகப் பயின்றவர்களை ஓதுவார்களாக நியமித்து பண்முறையோடும் பக்தியோடும் பாடுவதற்கு ஆலயத் தர்மகர்த்தாக்கள் ஒழுங்கு செய்வார்கள். மக்களும் பண்ணோடு பாடப்படும் தேவார திருவாசகங்களைப் பத்தி சிரத்தையுடன் கேட்டு இறையருள் பெறுவார்கள். அப்படியான ஓர் ஒழுங்கு நமது ஆலயங்களில் இல்லை. நம் நாட்டு ஆலயங்களில் பூசை நடைபெறும் வேளையில் தேவாரம் பாடுவதற்கு ஒருவர் அழைக்கப்படுவார். அவர் இராகமோ தாளமோ பண்முறையோ என்பவை இல்லாமல் சில நிமிடங்களில் தேவார திருவாசகங்களைப் பாடி முடிப்பார். பள்ளிக்கூடங்களிலும் தேவார திருவாசகங்களை வரன் முறையாகக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்களில்லை. இவ்விதமான குறைகளை ஓரளவிற்கு நிவிர்த்தி செய்வதற்காக கொழும்பு இந்துசமய ஆலோசனைச் சபை சென்ற நான்கு வருடங்களுக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து பண்ணிசைப்புலவர் திரு. P. A. S. இராஜசேகரன் அவர்களை அழைத்து யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பல மாணவ மாணவிகளுக்கும் சங்கீத பூஷணப் பட்டம் பெற்ற விற்பன்னர்களுக்கும் சென்ற நான்கு வருட காலம் தேவாரப் பண்ணிசை வகுப்புகளை நடத்த ஒழுங்கு செய்தது. குறித்த வகுப்புகளில் பயின்றவர்கள் தேவார திருவாசகங்களைப் பண்ணோடு பாடும் திறமையும் பெற்றுள்ளார்கள். இவ் வருடத் தொடக்கத்தில் குறித்த வகுப்புக்கள் கொழும்பு இந்து மாமன்றத்தின் பார்வையில் நடைபெறுகின்றது.

ஜூன் மாதத்துடன் திரு. இராஜசேகரன் அவர்களுடைய ஒப்பந்தம் முடிவடைகின்றது, ஜூன் மாதமுடிவில் அவர் தாயகம் திரும்பிவிடுவார். தமிழ் நாட்டிலிருந்து ஒரு தகுதியான தேவார ஓதுவார் வந்து இவ் வகுப்புகளில் பயின்ற மாணவ மாணவிகளை ஜூன் மாத நடுப்பகுதியில் ஐந்துநாட்களுக்குப் பரீட்சிப்பார். மாணவ மாணவிகளுடைய தகுதிக்கேற்பப் புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்களுக்குத் தராதரப் பத்திரங்கள் தகுதிக்கேற்றவாறு வழங்கப்படும். அங்ஙனம் தராதரப் பத்திரம் பெறுபவர்களை பள்ளிக்கூடங்களில் தேவார ஆசிரியர்களாக நியமனஞ் செய்யும் ஆலோசனையை இந்துமாமன்றத்தின் கேள்விப்படி கல்வியதிகாரிகள் செய்கிறார்கள் எனவும் அறிகின்றோம்.

போதனையிலும் சாதனையே சிறந்தது தேவார திருவாசகங்களை ஓதுவதை வரன்முறையாகப் பயின்றவர்களே மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்க ஒழுங்கு செய்வது சிறந்த முறையாகும். திரு இராஜசேகரன் அவர்களிடம் பயின்றவர்கள் ஆலயங்களிலும் சைவ சமயக் கூட்டங்களிலும் தேவார திருவாசகங்களை ஓதுவதைக் கேட்டவர்கள் திரு. இராஜசேகரன் அவர்களுடைய சேவையைப் பாராட்டத் தவறமாட்டார்கள். ஒரு விளக்கையேற்றினால் அவ் விளக்கிலிருந்து பல விளக்குகளையேற்றலாம். அதேபோல திரு. இராஜசேகரன் அவர்களிடம் தேவார திருவாசகங்களை வரன்முறையாக ஓதப் பயின்றவர்கள் எதிர்காலத்தில் பல மாணவ மாணவிகளுக்கு தேவார திருவாசகங்களை மரபாக ஓதும் முறையைக் கற்பிப்பார்கள்.

இந்து ஆலோசனைக் கலாசாலையினதும் இந்துமாமன்றத்தினதும் தொண்டு பாராட்டற்குரியது. சைவ சமயத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு அவர்கள் நிரந்தரமாகத் தமிழ் நாட்டிலிருந்து ஓர் ஓதுவாரை அழைத்து பண்ணிசை வகுப்பை நடத்துதல் சிறந்த பணியாகும்.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு வலந்தலை சயம்புவீதி அருணாசலம் தம்பையா அவர்களிடம் 1970 ம் ஞு ஜனவரி (தை) மீ 1ம் திகதி (1-1-70) க்கு முன் அடைவு வைதது மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் 1972 ம் ஞு யூன் (ஆனி) மீ 28 (28-6-72) புதன் கிழமை முற்பகல் ஒனபதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
Auctioneer Sales & Valuer.
எம் 100 2, 9-6-72

"இரசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்; 31-5-72

## திரு. தம்பு சேனுதிராசா அவர்கள் ஓய்வுபெறுகிறார்

'சேனுதி' என்று யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்களால், மாணவர்களால், பழைய மாணவர்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. தம்பு சேனுதிராஜா அவர்கள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியப் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். நீராவியடியைச் சார்ந்த தம்பு மாஸ்ரர் குடும்பத்தில் தலை மகனாகிய திரு. சேனுதிராசா அவர்கள் சென்ற 23 ஆண்டுகளாக கணித, பௌதிக, புவியியல் பேராசானாகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்து வந்தார். மாணவப் பேரவையின் இயக்குநராகவும் உடற்பயிற்சித் துறையின் இயக்குநராகவும் இவராற்றிய சேவை அளப்பரியது.

இந்துக்கல்லூரியின் மாணவனாயிருந்து, B. Sc. பட்டம் பெற்றபின் உயர்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றிருந்த இவர். ஆரம்பத்தில் வாணியற் பகுதியல் ஒரு முக்கிய அதிகாரியாகவிருந்தார். கல்வியைப் பயிற்றுவதில் ஆர்வம் கொண்டவராய் 1950 ம் ஆண்டு இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிய முன்வந்தார், இவர் மாணவனாயிருந்த காலத்தில் 'கிரிக்கெட்' முதலிய விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டார்.

நாட்டின் பல பாகங்களிலும் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அநேக பொறியியல் வல்லுநர்கள், மருத்துவ நிபுணர்கள், கணக்கியல் மேதாவிகள், சட்டத் துறையினர், மற்றும் அரசியல், வர்த்தகப் பரிபாலனங்களைச் சார்ந்தவர்கள் தொண்டாற்றுகின்றார்கள். இவர்களெல்லோரும் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். என்றுமே நிரந்தரமாயிருக்கக்கூடிய 'சேனுதி' என்ற பெயர் இப் பட்டியலில் காணப்படும். பழைய மாணவர் சங்கமென்றால் சேனுதி. சேனுதி என்றால் பழைய மாணவர் சங்கமென்று சொல்லுமளவிற்கு திரு. சேனுதிராசா அவர்கள் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டார். எம் சமுதாயமே பெருமைப்படக் கூடிய அளவிற்கு பழைய மாணவர் சங்கத்தினால் குமாரசுவாமி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. இதற்கு நிதி திரட்டும் காலத்தில் திரு. சேனுதிராஜா அவர்கள் சங்கத்தின் பொருளாளராயிருந்து மிகத் திறமையுடன் சேவை புரிந்தார். பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டங்களில் திரு. சேனுதிராஜாவின் ஆலோசனைகள் பெரும் வெற்றியீட்டின. இந் நிகழ்ச்சிகள் யாவும் எம் நினைவில் நீங்காத இடம் பெற்றவை யன்றோ?

கல்லூரியில் ஓய்வு நேரங்களில் சுருட்டும் பத்திரிகையுமாக ஐக்கியநாடுகள் சபை விவகாரங்களிலிருந்து 'சிவ குருநாதர் லேன்' விவகாரம் வரை உரையாற்றிய நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை.

இந்தக் கல்லூரி, சேனுதிராஜா, ஆகிய இரு பெயர்களும் இணைந்து பல்லாண்டு காலம் வாழும் என்பதில் ஐயமில்லை.

— எஸ் - வி - எம் —

## தாயும் பிள்ளையும்

[1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

சீவியத்தில் மிக முக்கியமான கட்டத்தை மூடுபுத்தகமாய் வைத்திருப்பது மிக வருத்தத்துக்கு உரியது.

ஒன்றுமே அறியாத இளந்தாய் தான் பட்ட கஷ்டங்களை விபரிக்கிறாள் "ஐயோ! அப்படியோ!" என்று தவிக்கிறாள் இளங்கர்ப்பவதி. பயத்துடன் சீவிப்பவர்கள் தேகத்தின் உறுதியைக் கெடுக்கிறார்கள் தேகத்தில் ஏற்படும் சின்னம் சிறு குளப்பங்களும் மனதில் பெரும் நோய்களாய்த் தோற்றுகின்றன நித்திரை குறைகின்றது, மன அமைதி இல்லாது போகின்றது. தேகம் முழுவதும் விண்பூட்டியதுபோன்று ஒரே குளப்பமாயிருக்கின்றது. இந்த நிலை கர்ப்பவதிக்குக் கூடவே கூடாது. இரத்தக் கொதிப்புக் கூடுவதற்கு இதுவும் ஒரு ஞாயம். எத்தனை கன்னடர் சமாதானம இன்மையால் தேவையற்ற குளிகளை விழுங்குகின்றனரோ!

விலங்கினங்கள் தங்களினத்தை தமக்கோர் ஆபத்துமின்றிப் பெருக்குகின்றன. அவ்வாறாக ஆற்றலும் அறிவுமுடைய மனித இனம் நன்மை தீமையைப் பிரித்தறியக் கூடிய நாம் ஏன் விசேஷ ஆபத்துக்குள்ளாக வேண்டும்? மக்களைப் பெற்று மடியில் வைத்து தாலாட்டுவது மட்டில்லா ஆனந்தத்தைக் கொடுக்கும் ஒரு செயல். இதை மகளிர் சரியான மனப்பாங்குடன் நோக்குதல் வேண்டும்.

(வளரும்)

## சிவயோகச்செம்மல் ஸ்ரீ யோக சுவாமிகள்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

நூறு ஆண்டுகட்கு முன் உதித்து தெய்வப் பயிராக வளர்ந்த அது நல்வழிப்படவிருந்த நானிலம் முற்றும் பூமாதேவி நோகாதவாறு மெதுவாக நடந்து சன்மார்க்கம் போதித்ததை நம்மனோர் எத்தனைபேர் கண்டோம் கேட்டோம். உடன் கூடித் திரிந்து துய்த்தோம். நல்வழிப்பட்டோமா!

ஒருசமயம் சுவாமிகளிடத்து உண்மையாக நடந்த சம்பவம் ஒன்றை விபரிக்க முயல்வோம். சுவாமி மெல்ல மெல்ல நடந்து கொண்டிருக்கிறார் தனிமையாக; மாலை நேரம் 5 மணிப்பொழுது. அடித்தொண்டன் ஒருவன் அறியாமலே பின் தொடரத் தலைப்பட்டு விடுகிறான். அவர் உணர்வில் பட்டு விடுகிறது. யாரது? நீயா!

சுக விசாரணை நடைபெறுகின்றது. பின் இதோபதேசம் ஆரம்பமாகின்றது நீ பரிசுத்தன். மாயாமலம் உன்னைக் கீழ்ப்படுத்துகின்றது. பளிங்கினை ஒப்பச் சார்ந்ததன் வண்ணமாகும நீ மாயை வயப்பட்டு அலைகிறாய், நீ செய்துகொண்ட வினைக்கு ஒப்ப வினைப் பயன்களை நாம் பகுத்துத்தர அவைகளை அனுபவிப்பது மட்டுமல்ல கேவலம் புதிய வினைகளையும் மன அழுக்காற் செய்து விடுகின்றனை என்னே விபரீதம்? அடுத்து அந்நேரம் சுவாமிகளின் வாயிலிருந்து வருகின்றது.

களிம்பு தோய்ந்த செம்பென உனைமருவும் கருமைகூர்மலம்
கண்டது கலக்கும்
பளிங்கு போன்றது உன்றன்மை, அம்மலத்தின் பற்றினல்
உடல்பல எடுத்துழன்றாய்
வளங்குலாம் புவனந்தோறும் உன்வல் வினைப்பயன் வருமுறை
நெறியே
அளந்து நாந்தர நுகர்ந்தும் மேல் நுகர்வும் ஆக்கியே திரிந்தனை
மன அழுக்கதனல்.

என்னே! தயாளம் என்னே பரிவு, கனிவுதான் என்னே! அந்த அறிவுச் சுரங்கம் அந்த ஒரு உயிரை வழிப்படுத்த எத்தனை மணிநேரத்தைப் பயன்படுத்தியிருக்கும் இதனை ஒப்புநோக்கியன்றோ உமாபதிசிவாசாரியர் அவர்கள் சீவன்முத்தர் நிலையினைத் திருவருட் பயனிலே கூறும்போது,

கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக

என்று கூறிப் போந்தார்.

ஓங்கு உணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குவர் மற்றேதுண்டு சொல். அவர்கள் பேரின்பத்துள் புகுந்து பொருந்தி ஆனந்த நித்திரை செய்வார்கள் தேவை ஒன்றும் அவர்கட்கு இல்லை அருள் நிரம்பிற்று, அகம் மலர்ந்தது, முகம் பிரிதிபலிக்கத் தலைப்படுகின்றது என்ன வேண்டும், எவை வேண்டும் அவற்றை அவ்வப்போது உடனுக்குடன் பெறும் ஆற்றல் தோற்றி விடுகின்றது.

எப்பவோ முடிந்த காரியம்.

குருபரன் திருத்தாள் வாழ்க. வணக்கம். (ந. நி)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

44/8 பள்ளிக்கூட ஒழுங்கை நீராவியடி வண்ணர்பண்ணை
சின்னப்பு செல்லையா —வழக்காளி

M B 11915 எதிராக

11/1 இரண்டாம் ஒழுங்கை பிரவுண்ரேட் யாழ்ப்பாணம்
பேலிஸ் பேபிநோனு எதிராளி

கரணவாய் தெற்கு கதிரவேலு சுப்பிரமணியம் தேவையானபகுதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 11915 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1972 ம் ஹு ஆடி மீ 1 ம் உ. (1-7-72) முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும், முற்பகல் 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், முற்பகல் 11-00 மணிக்கு மூன்றும் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6000/- இன்னும் ரூபாய் 3000/- த்துக்கு 7-8-70 தொடக்கம் 31-8-71 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய 569-67. செலவில் ரூபாய் 320;- கொடுபட்டுள்ளது.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணர்பண்ணை வடகிழக்கு வண்ணர்பண்ணைக் கோயிற்பற்று "செம்மண் கிடங்கு" பர நில இலா 1 - 8 7/10 குளி உத்தரவு பெற்ற உலாந்தா எஸ், ஏகாம்பரமவாகளின் 30-9-56 இல் வரையப்பட்ட 277 ம் இலக்கப் படத்தில் 7 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணியும், 8 ம் துண்டாக விளங்கும் பர நில இலா 2 - 0 குளி. ஆனுல் உலாந்தா அளவின் படிக்கு பர நில இலா 1 - 17 குளி இவவிரு துண்டுகளும் கூட்டி பர நில இலா 3 - 7 7/10 குளி இதடங்கலில் வடக்குப் பக்கமாக பர நில இலா 1 - 0 குளி. இதற்கெல்லை கிழக்கு கந்தையா நடராஜாவினுதனம் வடக்கு பொன்னையா ராஜகோபாலினுரிமையாளரினுதனம் மேற்கு பண்டாரம் நாகலிங்கததினுதனம் தெற்கு எஞ்சியகாணி.

2, ஷெயூர் "செம்மண் கிடங்கு" பர நில இலா 7 - 6½ குளி ஷெ இலக்கப்படம் 277. திகதி 30-9-56 இல் உத்தரவுபெற்ற உலாந்தா எஸ். ஏகாம்பரமவர்களால் வரையப்பட்ட படத்தில் 1 ம், 2 ம், துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ள காணி பர நில இலா 1 - 1/10 குளி, வீடு செய்பயிர் வான்பயிர்கள் கிணற்றில் பங்கும வழிவாய்க்காலுருத்தும் இதற்கெல்லை கிழக்கு ஷெ படத்தில் 7 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணியும் நாகர் செல்லையாவுக்குரிய காணியில் ஒரு பகுதியும் சகலருக்குமுரிய 7 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணியும் வடக்கு பொன்னையா ராஜகோலினுரிமையாளரினுதனம் மேற்கு ரேட்டும் ஷெ படத்தில் 5 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணியும் செல்லமுத்து மகள் மாரிமுத்துவுக்குரிய காணியில் ஒருபகுதியும் தெற்கு ஷெ படத்தில் 5 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணி,

3, ஷெயூர் "செம்மண் கிடங்கு" பர நில 7 - 0 குளி ஆனுல் ஷெ படத்தின்படி பர நில இல 6 - 2 2/10 குளி இப்படத்தில் 3 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் துண்டு பர நில இலா 0 - 3 1/10 குளி கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் அரைபங்கு கப்பியுடன் இதற் கெல்லை கிழக்கு வடக்கு தெற்கு 7 ம் துண்டாகக் காட்டப்பட்டிருக்கும் காணி, மேற்கு 2, 5, 4 ம் துண்டுகள் இதடங்கலில் பிரிவிடப்படாத ¼ பங்கு,

செ. விசாகரெத்தினம்
403, பருத்தித்துறை ரேட்டு, கொமிஷனர், விலமதிப்பாளர்
கல்லூர் - யாழ்ப்பாணம். 27—5—72 எம் 110—9-6-72

## COMMISSION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக்கோட்டில் வழ. இல. M. B. 9733

1. பொன்னையா கதையா
2. பெண் நவரட்ணம்மா கரணவாய் வடக்கு,

எதிராக —வழக்காளிகள்

1. சின்னவன் கந்தன் 3. ஆழ்வான் கந்தன்
2. சின்னவன் இளையவன் 4. பெண் நாகம்மா

இமையாணன் — எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1972ம் ஹு ஆடி மாதம் 12 ம் திகதி (12—7—72) புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் இளகாம குறிச்சி "மங்கிரகவி,, நி. பா 15 இதில் குறித்த பிரிவிடலுறுதியோடு அணைக்கப்பட்ட படத்தில் 5 ம் துண்டுக நி. பர 7 குளி 4. 10/32 எல்லை கிழக்கு V. கந்தா முருகேசுவுக்குரிய ஆதனமும் மறு ஆதனமும், வடக்கு சின்னவன் இளையவனுக்குரிய ஆதனம். மேற்கு சின்னவன் இளையவனுக்கும் ஐயா கைப்பெண் இளையாட்சிக்கு மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு தாமோதரம்பிள்ளை பெண் மீனாட்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் முழுவதும் தெரு பாவிப்புரித்தும் இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 4350/—

| | |
|---|---|
| தீர்வைத்தொகை — ரூபா | 1916—66 |
| ரூபா 1250/—க்கு 10 வீத வட்டி 24—8—67 தொடக்கம் 20—1—68 வரை | 51—06 |
| ரூபா 1967—72க்கு 5 வீத வட்டி 20—1—68 தொடக்கம் 23—9—70 வரை | 34—31 |
| கோட்டுச் செலவு | 204—90 |
| மொத்தம் ரூபா | 2206—93 |
| முன்வரவு — 1250/— | 1250—00 |
| மீதி ரூபா | 956—93 |
| 26-11-70 ல் கொடுபட்டது ரூபா | 200—00 |

"சந்நிதி வேல்" கா. முத்துக்குமாரு ஐயர்
பருத்தித்துறை. கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
1-6-72 113, 9-6-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வேலாயுதர் சின்னையா 2. பெண் ஐயாத்தைப்பிள்ளை
அனலைதீவு — வழக்காளிகள்.

வழ. இல: M B 12109 எதிராக

1. கதிரவேலு மருதையனுர் 2, பெண் விஜயலட்சுமி
அனலை தீவு — எதிராளிகள்,

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 12109-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1972-ம் ஹு ஆடி மீ 15-ம் திகதி (15-7-72) சனிக்கிழமை காலை 11-30 மணியளவில் அக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதலும் வட்டியும் 4,624/- ரூபா மேலும் 3000/- ரூபாவிற்கு 25-10-70 — 6-5-71 வரைக்கும் 12 வீத வட்டியுங் கூட்டிய தொகைக்கு 6-5-71 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 348/70 சதம் (ஏற்பட்ட செலவு 229-50 வெலியாத்துச் செலவு 70-50 இனி மேலேற்படும் செலவு 48-70) இதில் முதலால் கட்டிய 1000/- ரூபாவும் செலவால் கொடுபட்ட 150/- ரூபாவும் போக மிகுதி.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணமாவட்டம் தீவுப்பகுதி அனலை தீவுக்கோவிற்பற்று அனலைதீவிறை "வெள்ளிடை" பர, நில. லா, 8. அளவுப்படி பர. நில. லா. 9, எல்லை கிழக்கு இதிற்சொல்லிய 2ம் காணி. வடக்கு ஆறுமுகம் பெண் நாகமுத்துவினுதனம், மேற்கு நாகநாதர் பசுபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு சீவரட்ணம் பெண் தையல்நாயகிக் குரியவாதனம். இது முழுவதும்.

(2) ஷெயிறை "வெள்ளிடை" பர. நில. லா. 6½ கிணறும் எல்லை கிழக்கு கனகசபை பெண் கமலத்திற்கும் வீரகத்தி பெண் வள்ளியம்மைக்குமுரிய வாதனங்கள், வடக்கு செல்லையா சீவரட்னத்திற்கும் ஆறுமுகம் பெண் நாகமுத்துவுக்குமுரியவாதனங்கள். மேற்கு மேலே சொல்லப்பட்ட முதலாங்காணி, தெற்கு சீவரட்னம் பெண் தையல்நாயகிக்குரியவாதனம். இதடங்கலும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலம்" கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
28/1 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
1—6—72 111, 9—6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

*வழ: இல. M, B. 11636*

ஆயிலி, காரைநகர் 1. விஞசித்தம்பி சிவப்பிரகாசமும் பெண்
2. சௌபாக்கியமும் —வழக்காளிகள்,

*எதிராக*

நாரந்தனை 1. இன்னுசிமுத்து அல்பிரெட்டும் பெண்
2 பெயித் இரஞ்சித ரத்தினமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11636ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1972 ம ஆூ ஆடி மாதம் 8-ம் திகதி (8-7-72) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 5158/-ம் 20-4-71 தொடக்கம் 2-8-71 வரைக்கும் ரூபா 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றுக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூப்பா 571-25 சதமும்.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வடக்கு இறை, "கிழவன் காடும் விசயகான முதலி மணலும்" (Kilavan Kadu and Visayakana Mutali Manal) நி. ப. 5½-ம், வீடும் பனைகளும் பிரயோசனம் தரும் பயிர்களும். ஆனுல் வடக்கெல்லைக் காணிக்கு மேற்கெல்லைப் பக்கமாகப் போகும் 10 அடி அகல நடைபாதைப் பாவிப்புரிமை தவிர, எல்லை கிழக்கு இசாக்கு மோசேஸின் ஆதனம், வடக்கு சின்னையா துரைசிங்கமும் பெண் நேசம்மாவினதும் ஆதனம். மேற்கு சரவணமுத்து தம்பையாவின் உரிமையாளரின் ஆதனம். தெற்கு ஒழுங்கை முகப்பும் சின்னையா துரைராசசிங்கத்தினுதனமும்.

மல்லாகம். செ. பாண்டித்துரை
29-5-72 கொமிஷனர், விலைமதிப்பாளர்.
106, 9—6—72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறை
தீ. அ. ரூசையாபிள்ளை கைம்பெண் எலிஸபெத் முத்தம்மா
இல. M B 11339 எதிராக — வழக்காளி
சரவணை மேற்கு, வேலுப்பிள்ளை பொன்னம்பலம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11339-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1972-ம் ஹு ஜூலை மாதம் 15-ந் திகதி (15-7-72) சனிக்கிழமை முற்பகல 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 5515/-ம் 24-12-69 தொடக்கம் 22-6-70 வரைக்கும் ரூபாய் 3500/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 380-12 சதம.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு ஊர்காவற்றுறை கோயிற்பற்று சரவணையிறை "இருஸசீமா" பர. நில லா 5, 3/8 புதுக்கக்கட்டிய கிணறும் கிணற்றுப் பங்குடன் இதற்கெல்லை கிழக்கு ஞமஸாமி செல்லையாவினுதனம் வடக்கு நாகலிங்கம் பெண் வள்ளியம்மைக்கும் நாகமணி கணபதிப்பிள்ளைக்குமுரிய வாதனங்கள் மேர்க்கு நாகமணி கணபதிப்பிள்ளைக்கும் இளையதம்பி செல்லத்துரைக்குமுரிய வாதனங்கள் தெற்கு ஒளுங்கை இதடங்கலும்.

113, டேவிற் ரேட், அ பொ. எதிர்மானசிங்கி
யாழ்ப்பாணம். 17-5-72 கொமிஷனர் & விலைமதிப்பாளர்
107; 9-6-72

## அநுதாபத்தீர்மானம்

*"பல வருடகாலம் சைவ சமய அபிவிருத்திக்கு அயராது உழைத்த பெரியார் திரு இரத்தினுகரம் அவர்கள் பிரிவைக் குறித்து இச் சபை அநுதாபப்படுகின்றது.*

*திருமதி. எஸ். இரத்தினுகரம் அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இவ்வநுதாபத் தீர்மானத்தை அனுப்பி வைக்க வேண்டும்" என்ற தீர்மானம் 9-4-72-ல் நடைபெற்ற அகில இலங்கை இந்துமாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.*

## 7-ம் ஆண்டுவிழா

யாழ். நாயன்மார்கட்டு அம்பாள் இளைஞர் மன்றத்தின் 7-ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை 10-6-72 சனிக்கிழமை இராஜராசேசுவரி அம்பாள்கோவிலுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் திரு. க. பொன்னையாஅவர்களது தலைமையில் நடைபெறவுள்ளது. இதையொட்டி பகல் விளையாட்டுப் போட்டிகளும் இரவு சொற்பொழிவுகளும், அதையடுத்து "பக்த கௌரி" "வீரமைந்தன்" முதலிய நாடகங்களும் நிகழவுள்ளன. ந. நி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல. M. B 12241

1. தியாகராசா பண்டிதவரதனும் மனைவி
2, பரிமளகாந்தி — இருவரும் காங்கேசன்துறை

—வழக்காளிகள்.

எதிராக

1. நாகன் வட்டனும் மனைவி
2. குண்டுமேணி இருவரும் பளை, தெல்லிப்பளை,

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 12241ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972 - ஆம் ஆூ ஆனி மீ 30 ம் திகதி (30-6-72) வெள்ளிக்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசத்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3420/-ம் 18-1-71 தொடக்கம் 27-6-71 வரைக்கும் ரூபா 2000/-க்கு வருஷம் நூற்றுக்கு 8 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும்வரைக்கும் வருஷம் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 372-ம் 30 சதமும். இதில் ரூபா 125/- செலவில் தவிர்த்து.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளைக் கோயிற்பற்று, பளை 'பெருவாகலட்டி' நிலப்பரப்பு வரகுச்செய்கை பத்து (10 Lms. V C.) இதில் மேற்குப் பக்கமாக நிலப் பரப்பு வரகுச் செய்கை ஆறு (Lms. V. C.) இதற்கு எல்லை கிழக்கு வைரவி வன்னித்தம்பியினதும் பங்காளரினதும், எதிராளிகளினதும் கோவிந்தன் சின்னத்தம்பியினதும் ஆதனங்கள். வடக்கு ஆறுமுகம்சின்னத்தம்பியின் ஆதனம், மேற்கு புகையிரதப் பாதை, தெற்கு வைரவி வன்னித்தம்பியினதும் பங்காளரினதும் ஆதனம் இதடங்கலும்.

அ. சிவானந்தன்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்,
'நித்தியகல்யாணி'
பலாலி ரேட்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். 26-4-72.
115, 9—6—72.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அளவெட்டி தெல்லிப்பளை கிழக்கு காலஞ்சென்ற தில்லையம்பலம் கந்தையாவின் தத்துவ வழக்கு.

கந்தையா அருந்தவநாதனும் பெண் தவரஞ்சிதமும் தெல்லிப்பளை கிழக்கு அளவெட்டி, தத்துவகாரர்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T 2353-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி. பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணி 1972 ம் ௵ ஆடி மீ 3 உ திங்கட்கிழமை முற்பகல் 10 00 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரகித்த ஏலத்தில் விற்கப்படும்,

**ஆதன விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளை கோயிற்பற்று தெல்லிப்பளை கிழக்குஇறை "நெடுங்கண்ணி" நில பர 12¼ பனைகளும் மற்றுமிதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு சின்னப்பு பெண சின்னுச்சிக்கும் நாகமுத்து கந்தையாவுக்குமுரிய ஆதனங்கள், வடக்கு N. கந்தையாவுக்குமுரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும், மேற்கு தமபிப்பிள்ளை பெண் தங்கத்துக்கும் பங்காளருக்கும் ராமப்பிள்ளை வயித்திலிங்கத்தின் உரிமையாளருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சின்னப்பு பெண் சின்னுச்சிக்குமுரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் 5/16 பங்கு.

2. ஷெ மல்லாகம் கோயிற்பற்று அளவெட்டி இறை "அணிஞ்சிலடி" நில பர 4 வடலிகளும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை மேற்கு பொன்னம்பலம் கைலாயபதியின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு பொன்னையா பெண் இராசலட்சுமிக்கும் அருணுசலம் கைம்பெண் சேதுப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலிற் சொரியலாய் 5/16 பங்கு.

சு கந்தசாமி
*கொமிஷனர் & விலைமதிப்பாளர்.*

19, *சுவாமியார் வீதி*
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 112, 9-6-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை பரமசிங்கம் பிள்ளையின் ஆஸ்திக்குத் தத்துவகாரனுகிய வேலணை மேற்கைச் சேர்ந்த நாகநாதர் நாகரத்தினம்.

இல: M B 10360 எதிராக —வழக்காளி.

வேலணை மேற்க்கைச் சேர்ந்தவர்கள். 1- கந்தையா சிவகடாட்சம்
2. மனைவி திலகவதி. —எதிராளிகள்.

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 10360-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு ஆடி மாதம 15-ம் திகதி (15-7-72) சனிக்கிழமை முற் பகல் 10 - 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: — முதல் வட்டிரூபா 1971 சதம் 25 ம் 9-10-68 தொடக்கம் 14-5-69 வரைக்கும் ரூபா 1000/– க்கு 15 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 399 சதம 95 அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 289 சதம் 95: வெலியாத்து செலவு ரூபா 50 சதம் 25: இனி மேல் வரும் செலவு ரூபா 59 சதம் 75. இதில் கொடுபட்டதொகைகள் தீர்வையின் பின்ரூபா 600 ம் கோட்டுச் செலவால் ரூபா 250 ம் கழிவாக.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பற்று பகுதி ஊர்காவற்துறை கோவிற்பற்று சரவணை இறை "அழகக் கோன் வயலும் நரஞ்சன் வயல் பிரிவுகள்" நெல் பரப்பு இலாட்சம் 28 ம் குழி 8 ம். எல்லைகள கிழக்கு சண்முகநாதன் மனைவி நாமகள் ஆதனம். வடக்கு-தம்பு மகள் கமலாச்சிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு வாய்க்கால். தெற்கு-தம்பிஐயா தர்மலிங்கத்தின் ஆதனம்.

பதிவு இலக்கம்: யாழ்ப்பாணம் C. 345/78.

107, பெரியதெரு, — **எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்**
யாழ்ப்பாணம், — வெந்தீஸ் கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
2—6—72 — 105 9-6-72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**

1. காரைநகர் கந்தையா தம்பிப்பிள்ளை
2. ஷெயூர் பெண் சவுந்தரம — வழக்காளிகள்

வழக்கு இல: M B 6494 எதிராக

காலஞ்சென்ற மண்டைதீவு கனகசபை நமசிவாயம்

காலஞ்சென்ற க. நமசிவாயத்தின் ஆதனங்களின் கோட்டுப் பிரதிநிதி மண்டைதீவு க. நமசிவாயம கைம்பெண் தேவமணிதேவி — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6494ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் என்னல் 1972 ம் ௵ ஆடி மீ 15-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: — முதல்வட்டி ரூபா: 1590/-ம் ரூபா: 1000/-க்கு 16 - 3 - 64 தொடக்கம் 23 - 5 - 70 வரைக்கும் 15வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 482/60 சதம்

**ஆதனவிபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் அல்லைப்பிட்டிக் கோவிற் பற்று மண்டைதீவு இறை " துணவடி" பர நி இல ஐந்து (பர நி இல - 5) வீடும் கிணறும் பயிர்வகைகளும எல்லை கிளக்கு விஞயகமூர்த்தி சோமசுந்தரத்திற்கும் மறுபேர்கட்குமுரிய வாதனம் வடக்கு குறித்த விஞயகமூர்த்தி சோமசுந்தரத்திற்குரிய வாதனம் மேற்கு சித்தி விநாயகப்பிள்ளையார் கோவிலுக்குரிய வாதனம் தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

2, ஷெ இறை "குடவன் புலம்" பர நி இல பத்து (பர நி இல 10) எல்லை கிழக்கும் வடக்கும கதிரவேலு முருகேசுவிற்குரிய வாதனம் மேற்கு கதிரவேலு ஏரம்பமூர்த்திக்குரியவாதனம் தெற்கு பொன்னம்பலம் மகள் பாறுபதிப்பிள்ளைக்குரியவாதனமும் குளமும்' இதடங்கலும்.

துறைமுகம், காரைநகர், — **வை. ஏரம்பமூர்த்தி**
1972-ம் ௵ ஆனிமீ 3-ம் *திகதி.* — ஏலவிற்பனையாளரும்
ஏம். 116, 9-6-72 — *விலைமதிப்பாளரும்*

## புதிய அரசியல் திட்டமும் தமிழ்

*1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி*

உயிரற்ற சடலமாகிய தமிழ் மொழி உபயோகச் சட்டமே அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கின்றது எனபதும் ஒரு சிறிதும் சந்தேகத்துக்கிடமின்றி புலனுகின்றது,

(2) அரசியலமைப்பின் 11 வது பிரிவின்கீழ நீதி மன் றங்களில தமிழ் மொழிக்கு முன்னில்லாத ஒரு விசேட அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் குமாரசூரியரும், திருவாளர்கள் மாட்டின், தியாகராஜா ஆகியோரும் கூறியிருக்கிருர்கள். 1960 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நீதிமன்றமொழிச் சட்டத்தின் கீழ் அமைச்சர் எல்லா வசதிகளும் உண்டு என்று, தான் கருதும் நீதி மன்றங்களின் நடவடிககைகள சிங்களத்தில் நடைபெறலாம் என்று விதிக்க அதிகாரம் பெற்றிருந்தார். அப்படி அமைச்சர் விதிக்காத நீதி மன்றங்களில் ஆங்கிலமே தொடர்ந்தும் நிர்வாக மொழியாக இருக்கும். கடந்த 12 ஆண்டுகளாக நாட்டிலுள்ள மிகப்பெரும்பாலான

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**

யாழ்ப்பாணம் 3 ம் குறுக்குத்தெரு
1. விசுவலிங்கம் குகதாசனும் மனைவி
2. பரமேஸ்வரியும் — வழக்காளிகள்

M. B. வழக்கு இல. 11692 எதிராக

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை கனகசபை அவென்யூ.
காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகசபை —எதிராளி

காலஞ்சென்ற எதிரி சு. கனகசபையின் சொத்தின் பிரதிநிதியாக வண்ணுர்பண்ணை 478/5 கனகசபை அவென்யூ கனகசபை கைம்பெண் நாகம்மா, — பதில் எதிராளி

M B 11692 ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1972-ம் ௵ யூலாய் (ஆடி) மீ 11-ம் உ (11—7—72) செவ்வாய்க்கிழமை முற்பகல் பததுமணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 19.069/- மேலும் 14,000/- ரூபாவுக்கு 15-5-70 தொடக்கம் 9-7-71 வரைக்தும் வருடமொன்றுக்கு 11 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 682-32 சதம், பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்,

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும், பகுதியும் வண்ணுர்பண்ணை கோயிற்பற்று, வண்ணுர்பண்ணை தென்கிழக்கிறை "தாண்டிக்குளம் கரையும் ஐக்றூற்றுவான் வயலும்" குளிகள் 3 3/8 பண்டகசாலை மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு சுப்பையா மனைவி சிவக்கொழுந்துப்பிள்ளையினுதனம், வடக்கு செல்லத்துரை மனைவி நல்லேஸ்வரியினுதனம் மேற்கு ரோட், தெற்கு சொக்கலிங்கம் கந்தப்ப சேகரத்தினுதனம் இதுமுழுவதும்,

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
"இராசகிரி" — கொம்மிசனர், விலைமதிப்பாளர்
643, காங்கேசன்துறை வீதி — 7—6—72
யாழப்பாணம். — 117, 9 6-72

## கோட்டு விற்பனவு விளம்பரம

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்**

(1) கே. ஞானசுந்தரம் (2) பெண் கனகசுந்தரி
இருவரும் கொக்குவில்

இல M B 11506 *எதிராக* —*வழக்காளிகள்*

வண்ணுர்பண்ணை மேற்கு 1. கந்தையா ஜயரெத்தினம்
பெண் பாக்கியலக்ஷ்மி - எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11506ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஆண்டு ஆடி மீ 17-ம் திகதி (17—7—72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத தொகை: முதல் வட்டி ரூபாய் 4489-00-ம் 27-2-72 தொடக்கம் 19-9-70 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 289-20,

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வண்ணுர்பண்ணை வடமேற்கு வண்ணுாபண்ணை கோவிற்பறறு "பாதன வளவும அம்மை சீமாவும்" பர - நில - இலா 3 இதில வடக்கில் பிரிவிடப்பட்ட பர - நில - இலா - 2 கல்வீடு கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு பொன்னையா பெண் நாகம்மாவுக்குரிய வாதனம் வடக்கு ரோட்டு மேற்கு வல்லிபுரம் மயில்வாகனத்துக்குரிய வாதனம் தெறகு கந்தையா ஜெயரததினத்துக்கும் பெண் பாக்கியலஷ்மிக்குமுரிய வாதனம் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றல் பங்கும் வளிவாய்க்கால் பாவிப்புருத்தும தூர்வை ஆடுகால் துலாவில் பங்கும் பதிவிலக்கம் யாழ்ப்பாணம் D 291/232.

**அ. போ. எதிர்மானசிங்கி**
புதிய இல.113, டேவிட் ரோட், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம.18-5-72 — 108 9

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

*யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 9—6—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது*

பத்திராதிபர்: திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

## திருவிழா

அளவெட்டிப்பெருமாள்கடவை பிள்ளையார், சண்டிருப்பாய் வேவிற்பதிஐயனர் கோயில் திருவிழா 17-6-72 ல ஆரமபமாகின்றது.

நீதி மன்றங்களில் ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருந்தது. புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை முழுவதிலுமுள்ள எல்லா நீதிமன்றங்கள், தொழில் விசாரணைச் சபைகள், இணக்கச் சபைகள் முதலிய எல்லாவற்றிலும் சிங்களம மாததிரமே நடவடிக்கை மொழியாகவும பதிவேட்டு மொழியாகவும விதிக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களில தேசீய அரச பேரவை விரும்பினுல் வேறு ஒழுங்கு செய்யலாம் என்பதைத் தவிர, பதிவேடுகளைப் பொறுத்த வரையில தமிழுக்கு எந்த இடமும் கிடையாது. முன்பு சாதாரன சட்டமாக இருந்த சிங்கள உபயோகம் பற்றிய சட்டம் அரசியல் சட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாது எவ்வித மாற்றமும் செய்ய முடியாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அண்ணனுக்கும் தம்பிக்கும பொதுவான சொத்தை அண்ணன் பேருக்கு உறுதியெழுதிவிட்டு அண்ணன் விரும்பினல தம்பிக்கு ஏதாவது கொடுக்கலாம என்று வாசகம் காட்டுவது போல, இவ்வரசியலமைப்பு இருக்கிறது, யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் தமிழில நடைபெற்றன என்ற செய்தி பத்திரிகைகளில் பெரிது படுத்திப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் பேசப்படும் ஒரு வார்த்தையாவது நீதிமன்றப் பதிவேட்டில் தமிழில் பதியப்படமாட்டாது. அரசயல் சட்டத்தின்படி அவை சிங்களத்தில் மொழிபெயர்த்துப் பதியப்படவேண்டும், ஒரு இடைக்கால ஏற்பாடாக அமைச்சரின் மறு கட்டளை வரும்வரையில் ஆங்கிலத்தில் பதியப்படும். தமிழில் சாட்சியமளிக்கும் உரிமையை தமிழனுக்கு யாரும பெற்றுக்கொடுக்கததேவையில்லை. பேசமுடியாத ஊமை கடத்தன் பாஷையில் வழக்கு நடவடிக்கைகளில் பங்கு பற்றும் உரிமை தொன்றுதொட்டு உண்டு. தமிழ் பிரதேசங்களில் பதிவேட்டு மொழியாக இனி அரசாஙகம் செய்யுமெனறு எதிர்பார்க்கிருர் திரு மாட்டின். தமிழ் மக்களுடைய இன்றைய உணர்ச்சியை திருப்திப்படுத்துவதற்கு அப்படிச்செய்யப்பட்டாலும், அது நினைத்த நேரத்தில் மாற்றப்படககூடிய சாதாரன சட்டமாக இருக்கும். அரசியல் திட்டத்தில் தமிழருக்கு உருப்படியான உரிமை கிடையாது என்பதை இது மேலும் வலியுறுத்துகின்றது.

தமிழ் மக்களுடைய அரசியல் கட்சிகள், கட்சிச்சார்பற்ற பிரமுகர்களின் மாநாடுகள், ஆகியவற்றின் ஏகோபித்த கோரிக்கை தமிழ் மொழியின் உரிமை அரசியல் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதே, அக்கோரிக்கை முற்ருகப் புறககணிக்கப்பட்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. பிரதம மந்திரியைக் கண்டு பேசலாம் என்று திரு. வ. பொன்னம்பலம் கூறியிருக்கிருர் இவ்வரசியல் திட்டம் ஆக்கப்படுமுன் அவரைச் சந்திக்க முயற்சித்த பல பிரதிநிதித்துவம் வாய்ந்த குழுக்களுக்கு சந்திப்பதற்கே சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. தமிழரசுக்கட்சி பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் சந்தித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அக்கட்டத்திற்ருன் நாம் அரசியல் திர்ணய சபையில் இருந்து வெளியேறினேம். எனவே அரை உண்மைகளையும், உண்மையற்றவற்றையும் கூறி தமிழினத்தை எவரும் ஏமாற்ற முடியாது.